**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ம் நாள் சனிக்கிழமை

**இ.ஏ.எண்.18/2025 அதன் இ.பி.எண்.79/2021**

**அதன் அ.வ.எண்.67/1992**

ராஜா முத்தையா ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

–எதிர்–

1) ஜானகி ... எதிர்மனுதாரர் / மனுதாரர்

2) ஜி.தனபால் ... எதிர்மனுதாரர்/2 ம் மனுதாரர்

இம்மனு என்முன்பாக 29.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 26 மற்றும் பிரிவு 151–ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் என்றும், அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவார். நிறைவேற்றுகை மனுவில் கடந்த 17.10.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒப்படைப்பு உத்தரவை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல்

செய்ய இருப்பதாலும், உத்தரவின் நகல் கோரி விண்ணப்பித்துள்ளதாலும், நிறைவேற்றுகை மனுவின் நடவடிக்கைகளை 2 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்க உத்தரவிட வேண்டியும், இல்லாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**<u>3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

3.1) மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லக்கூடியதில்லை என்றும், நிறைவேறுதல் மனுவில் 17.10.2025ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்படவுடன் அன்றைய தேதியே இணையதளத்தில் Digitally sign போட்டு உத்தரவானது பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்யவேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தால், மேற்படி உத்தரவை பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்திருக்கலாம் என்றும், நிறைவேற்றுதல் மனு நடவடிக்கைகளை இழுத்தடிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) அசல் வழக்கானது 1992ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பாணையை ஆட்சேபித்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பை ஆட்சேபித்து, மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டும், மேற்படி தீர்ப்பை ஆட்சேபித்து மனுதாரர் தரப்பில் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், இந்த மனுதாரரும், சில்வியா எபநேசரும் சேர்ந்து பல மனுக்கள் தாக்கல் செய்து நிறைவேற்றுதல் மனுவில் உத்தரவு பிறப்பிக்க விடாமல் இடையூறு செய்துள்ளார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

3.3) இந்த மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சிஆர்பி எண். 2898/25 என நம்பராகி உள்ளதால் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், நீதிமன்ற அமீனா தபசில் இடத்தை பார்வையிட்டு பூட்டியிருப்பதாகவும்,

பூட்டை உடைக்கவும், போலீஸ் பாதுகாப்பு, சர்வேயர் உதவி, மின் இணைப்பை துண்டிக்க கேட்டும் வாரண்டை ரிட்டன் செய்துள்ளார் என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையோ அல்லது சான்றாவணத்தையோ முன்னிடப்படவில்லை.

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் ஆவார்கள். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள், நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர்கள் ஆவார்கள். நிறைவேற்றுகை மனுவானது மனு தபசில் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர், மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8). இம்மனுவின் 1ம்மனுதாரர் அ.வ.எண்.67/1992 தாக்கல் செய்து, மேற்படி வழக்கானது கடந்த 36.09.2003ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மேல்முறையீட்டை எதிர்த்து தாக்கல் செய்த ஏ.எஸ்.எண்.2/2004 ஆனது 28.06.2004ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், மேற்படி மேல்முறையீட்டை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தாக்கல் செய்த மேற்படி இரண்டாம் மேல்முறையீடானது கடந்த 31.08.2020ம் தேதி 1ம் மனுதாரருக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பின்னர் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த SLP 15074/2020 மற்றும் 1206/2021

ஆனது கடந்த 08.09.2021ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன் பின்னர் நிறைவேற்றுகை மனுவை இம்மனுவின் 1ம் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, அது இந்நீதிமன்றத்தால் நி.ம.எண்.79/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது.

9). மனு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், நிறைவேற்றுகை மனுவில் கடந்த 17.10.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது அன்றைய தினமே இ–கோர்ட்–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டது. மேற்படி உத்தரவின் உத்தரவாணை நகலும் இ–கோர்ட்–ல் பதிவேற்றம் செய்யப்பட்டு விட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் CRPSR 2898/2025 தாக்கல் செய்யப்பட்டு, நம்பர் செய்யப்பட்டு விட்டதாக அவரது எதிருரையில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் தரப்பில் தனது வாதத்தை மேற்படி நம்பர் கொடுக்கப்பட்டதை மறுத்து கூறவில்லை.

10) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், இந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த அன்றைய தினமே உத்தரவின் நகலை பதிவேற்றம் செய்து விட்டதாலும், மனுதாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் CRPSR 2898/2025 தாக்கல் செய்து விட்டதாலும், நீதியின் நலன் கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 01.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.01 17:35:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

**<u>1). மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>** – இல்லை

**<u>2). எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u>** – இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploaded on 01.11.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.01 17:35:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ. திருநெல்வேலி
இ.ஏ.எண்.18/2025
இன்
இ.பி.எண்.79/2021
இன்
அ.வ.எண்.67/1992
நாள் 01.01.2025.
வரைவு/நேரிய உத்தரவு